[திரு. துரை கோவிந்தராசன்] [1979 பிப்ரவரி 22

எளிய மக்களுக்குக் கிடைக்கின்ற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இந்தச் சட்டத்தின் மூலமாக மற்ற மாநிலங்களும், கர்நாடகம், கேரளம், வங்காளம், பீகார், ஆந்திரா போன்ற மாநிலங்கள் எல்லாம், இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வருவதின் மூலமாக அவர்களும் இந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சட்டத்தை கொண்டுவருவதற்கு அக்கறை எடுத்துக் கொள்வார்கள் என்கின்ற வகையிலும் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை மற்ற மாநிலங்களும் பாராட்டுகிற அளவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு நான் மனப்பூர்வமாக வாழ்த்தி பாராட்டி, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1—24-க்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது இடங்கள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்டத்திற்கு விதிகள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் தேதியிடப்பெற்ற 2598ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1960ஆம் ஆண்டு பொது இடங்கள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1960) 8 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

98. 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ஆம் தேதியிடப் பெற்ற, தமிழ்நாடு அரசிதழின் பாகம் II, பிரிவு I, பக்கம் 573-ல் வெளியான ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1973 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் தேதியிடப்பெற்ற 5263 1973-ஆம் எண் அறிவிப்பை நீக்குவது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ஆம் தேதியிடப்பெற்ற 150436/ME/76—26ஆம் குறிப்

1979 பிப்ரவரி 22]

பாணையில் வெளியான அறிவிப்பு (1940ஆம் ஆண்டு மேட்டூர் நகரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1940) 4 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

99. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள், ஊராட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்களின் தேர்தல் நடத்துதல்) விதிகளை வகுப்பது சம்பந்தமாக ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் தேதியிடப்பெற்ற 1229ஆம் எண் அரசாணையிலும், 1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் தேதியிடப்பெற்ற 1920ஆம் எண் அரசாணையிலும் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2)பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS